IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.** 181/2021

**நாள்– 05.06.2025**

**வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எந்தெந்த பெயர்களில் தீப்பெட்டி கம்பெனிகள் நடத்தினேன் என்றால் அமல்ராஜ் மேட்ச் ஒர்க்ஸ் என்ற பெயரில் நடத்தினேன். ராஜ் மேட்ச் இன்டஸ்ட்ரீஸ், மாதா மேட்ச் இன்டஸ்ட்ரீஸ் ஆகியவற்றை எனது மகன் தான் நடத்திவந்தார். எனக்கும் பிரதிவாதிக்குமிடையேதான் தீப்பெட்டி தொழில் சம்பந்தமாக பரிவர்த்தனைகள் இருந்தன என்றும், எனது மகனுக்கும் பிரதிவாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். வியாபார ரீதியாக எனக்கும் பிரதிவாதிக்குமிடையே பற்று, வரவு இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்குமிடையே 2012 – 2013 வருடங்களில் மட்டும தான் பற்று, வரவு இருந்தது. நான் 2015ம் வருடம் அமல்ராஜ் மேட்ச் ஒர்க்ஸ் நிறுவனத்தை மூடிவிட்டேன். நான் அமல்ராஜ் மேட்ச் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை வரி, வருமான வரி ஆகியவற்றை செலுத்தியுள்ளேன். எனக்கும் பிரதிவாதிக்குமிடையே வியாபார ரீதியாக பரிவர்த்தனை இருந்தபோதும், மேட்ச் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை வரி, வருமான வரி ஆகியவற்றை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆண்டுகளில் வியாபார ரீதியாக நடந்த கணக்கு, வழக்கு பற்றிய பதிவேடுகள் என் வசம் உண்டு என்றால் சரிதான். அந்த கணக்கு வழக்குகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2012–2013 ஆண்டுகளில் நான் தாக்கல் செய்த விற்பனை வரி, வருமான வரி அறிக்கைகளின் நகல்கள் என் வசம் உண்டு என்றால் தற்போது என்னிடம் இல்லை. கம்பெனியை மூடிய காலத்தில் இருந்தே அந்த அறிக்கைகள் என்னிடம் இல்லை. அமல்ராஜ் மேட்ச் ஒர்க்ஸ் நிறுவனத்திற்குரிய விற்பனை வரி, வருமான வரி அறிக்கைகளை அரசு அலுவலரிடம் உரிய மனு தாக்கல் செய்து, சான்றிட்ட நகல் பெறமுடியும் என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது.

2) 2012–2013 க்குபிறகு எனக்கும் பிரதிவாதிக்குமிடையே எந்த பற்று, வரவும் கிடையாது என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்குமிடையே எந்த காலக்கட்டத்திலும் ரொக்க பணப்பரிமாற்றம் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்குமிடையே எந்தெந்த காலத்தில் எந்தெந்த தேதிகளில் ரொக்கப்பணப்பரிமாற்றம் நடைபெற்றது என குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியாது. அதற்கு ஏதேனும் எழுத்துப்பூர்வமான ஆதரவுகள் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த பிராதில் எந்த தேதிகளில் எனக்கும் பிரதிவாதிக்குமிடையே ரொக்க பணப்பரிமாற்றம் இருந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.5 என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் எனக்கும் பிரதிவாதிக்குமிடையே ரொக்கப்பணப்பரிமாற்றம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படிய அறிவிப்பின் அடிப்படையில் தான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிராதில் எனக்கும் பிரதிவாதிக்குமிடையே ரொக்கப்பணப்பரிமாற்றம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முரணாக ரொக்கப்பணப்பரிமாற்றம் இருந்ததாக வழக்கிற்காக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3) தற்போது நான் தனியாக எந்த தொழிலும் செய்யவில்லை. எனது தொழில்களை தற்போது எனது மகன்கள் பார்த்து வருகிறார்கள். ஆரோக்கியராஜ், அமல்ராஜ் என எனக்கு 2 மகன்கள் இருக்கிறார்கள். இன்று என்னுடன் ஆரோக்கியராஜ் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். மற்றொரு மகன் அமல்ராஜ் வழக்கறிஞருக்கு படித்துள்ளார். பிரதிவாதி என் மீது கழுகுமலை காவல்நிலையத்தில் 17.12.2020ம் தேதி ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் தொழில்நிமித்தம் பலதவணைகளில் பாக்கிஏற்பட்ட ரூ.9,50,000/– வாதிக்கு கொடுக்கவேண்டியிருந்தது என்றும், தொழில்நலிவால் அதை கொடுக்க இயலவில்லை என்றும், அதனால் வாதி பிரதிவாதியின் வீட்டிற்கு வந்து அசிங்கமாக பேசி மிரட்டி காசோலைகளை பெற்றுக்கொண்டார் என்றும், ரூ.25,000/– தரவேண்டும்

என எழுதி பெற்றுக்கொண்டதாகவும் வாதி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

4) இதுசம்பந்தமாக விசாரணைக்கு போலீசார் என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நான் நேரில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். எனது மகன்கள் காவல்நிலைய விசாரணைக்கு ஆஜரானார்கள் என்றால் சரிதான். விசாரைணயின் முடிவில் எனது மகன் ஆரோக்கியராஜ், வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே உள்ள பிரச்சனை தொழில் ரீதியானது என்றும் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாகவும் எழுதிக்கொடுத்துவிட்டு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் ஆரோக்கியராஜ் வாக்குமூலம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக ஆரோக்கியராஜை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்ற விவரம் பற்றி பிரதிவாதி எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர் வழக்குரைக்கு நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதுசம்பந்தமாக எனது மகனை ஒரு சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

5) வா.சா.ஆ 1 பணப்பற்று ஆவணம் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட வியாபார ரீதியான பற்று வரவில் எந்தெந்த காலக்கட்டத்தில் எவ்வளவு பாக்கி ஏற்பட்டது என்பதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 24.05.2016 வரை ரூ.7,47,500/– பாக்கி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தொகையை உரிய வட்டியுடன் ஒரு வருடத்தில் திரும்ப செலுத்துவதாக பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் வட்டி விகிதம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாக்கி தொகையான ரூ.7,47,500/– 2012 – 2013 காலக்கட்டத்தில் ஏற்பட்டது என்றால் சரிதான். 2012 – 2013 காலக்கட்டத்தில் ஏற்பட்ட பாக்கியானது வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்ட காலக்கட்டத்திலேயே காலாவதியாகிவிட்டது என்றும், எனவே அதை திரும்ப செலுத்தக்கோரி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) பிரதிவாதி எனக்கு ரூ.25,00,000/- பணம் திரும்ப தர வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பாக்கி தொகையான ரூ.7,47,500/- ரூபாய்க்கு எந்த வட்டி விகிதத்தில் கணக்கீடு செய்தால் ரூ.25,00,000/- வழக்கு தாவா தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2012-2013 காலக்கட்டத்திற்கு பிறகு எனக்கும் பிரதிவாதிக்குமிடையே எந்த பணப்பரிமாற்றமும் கிடையாது என்றால் சரிதான். 31.07.2018, 18.09.2020 தேதிகளில் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் அத்தாட்சிகள் பிரதிவாதியால் எழுதப்படவில்லை என்றும், அவை வழக்கிற்காக என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை பிரதிவாதி எழுதிக்கொடுத்திருந்தாலும் கூட காலாவதியான கடன்களை மேற்படி ஆவணங்கள் மூலம் உயிரூட்ட முடியாது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ. 2, 3 ஆவணங்களும் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிட்ட ஒரு வருட காலம் முடிந்த பின்னர், பாக்கி தொகையை திரும்ப செலுத்தக்கோரி சட்டப்படியான நடவடிக்கையை எடுத்தேனா என்றால் பணத்தை திரும்பக் கேட்டுக்கொண்டேதான் இருந்தேன். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எந்த சொத்தின் பத்திரத்தை பிரதிவாதி கொடுத்துள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கழுகுமலையில் ஒரு கல்யாண மண்டபம் உள்ளது என்றால் சரிதான். அந்த மண்டபத்தின் பெயர் தங்கயானை திருமண மண்டபம் என்றால் சரிதான். கழுகுமலை எனது சொந்தஊர் என்றால் சரிதான். மேற்படி திருமண மண்டபம் கழுகுமலை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதன் மொத்தப்பரப்பளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது, 25 சென்ட் இருக்கலாம். என் வசம் உள்ளதாக சொல்லப்படும் ஆவணம் மேற்படி திருமண மண்டபத்திற்குரியதா என்றால் இல்லை.

8) 2015ல் நான் தீப்பெட்டி நிறுவனத்தை மூடியதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 2012-2013 காலக்கட்டங்களில் நான் தாக்கல் செய்த விற்பனை வரி, வருமான வரி கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளபடி ரூ.25,00,000/- தரவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1

ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.7,47,500/– மட்டுமே பிரதிவாதி செலுத்தவேண்டிய பாக்கி தொகை என்றால் சரியல்ல. அந்த தொகையும் காலாவதியாகிவிட்டதால் அந்த தொகையும் தற்போது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதிகமான பணம் பெறவேண்டும் என்பதற்காக பிரதிவாதியின் வீட்டிற்குள் நுழைந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை மிரட்டி எழுதிவாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணம் எங்குவைத்து எழுதப்பட்டதாக எனது பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்குள் நுழைந்து அவரை அச்சுறுத்தி மேற்படி ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பத்தினரை அவதூறாக பேசியும் மேற்படி ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

9) எனது மகன் ஆரோக்கியராஜ், பிரதிவாதியின் மனைவியின் மீது சங்கரன்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒரு செக் மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. செக் மோசடி செய்துவிட்டதாக ஆரோக்கியராஜ் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியும். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதியின் மனைவி பதில் நோட்டீஸ் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பு ஆர்.எஸ். சுப்பையா என்ற வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்டது. அதற்கு அனுப்பப்பட்ட பதில் நோட்டிசை தான் நான் வா.சா.ஆ.7 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பதிலறிவிப்பில் உள்ள விவரங்களை தெரிந்து இவ்வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த நோட்டீசின் நகல் எனக்கும் தனியே அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் பெற்றேனா என்று எனக்கு நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். சங்கர் கணேஷ் என்ற வழக்கறிஞர் எனக்கு அனுப்பிய பதில் நோட்டீசின் நகல் நான் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த **ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ. 1** ஆகும்.

10) நான் தாக்கல் செய்த வா.சா.ஆ. 7 ஆவணம் சங்கர் கணேஷ் என்ற வழக்கறிஞரால் ஆர். எஸ்.சுப்பையா என்ற வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் என்றால் சரிதான். எனவே வழக்கின் நோட்டீஸ் விவரங்கள் அனைத்தும் எனக்கு

தெரியும் என்றும், அதனை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செக் மோசடி அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள காசோலைகள் இரண்டும் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே தொழில் ரீதியாக ஏற்பட்ட பற்று வரவு கணக்கிற்காக கூடுதல் தொகையை போட்டு பிரதிவாதியிடமிருந்து வலுக்கட்டாயமாக பெறப்பட்ட காசோலைகள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7 ஆவணத்தில் மேற்படி விவரங்களை பிரதிவாதி குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனவே வழக்கில் குறிப்பிட்டுள்ள தொகையை பிரதிவாதி எனக்கு திரும்ப செலுத்தவேண்டியதில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து கூடுதலான தொகையை அபகரிக்கவேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக மோசடிய ஆவணங்களின் துணையுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் பிரதிவாதி கொடுத்த கந்துவட்டி கொடுமை புகாரிலிருந்து தப்புவதற்காக தாக்கல் செய்யப்பட்ட பொய் வழக்கு இது என்றால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து பெறப்பட்ட காசோலைகளை பயன்படுத்தி எனது மகன் மோசடியாக சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi